கவுரி லங்கேஷ், கல்புர்க்கி, பன்சாரே, தாபோல்கர் போன்ற வரலாற்று ஆய்வாளர்கள், பகுத்தறிவாளர்கள், எழுத்தாளர்கள் இந்துத்வா சங்பரிவார் அமைப்புகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். பல மொழி பேசும், வேறுபட்ட கலாச்சாரங்களை உடைய பல மாநில மக்கள் கூட்டமைப்பாக இணைந்து வாழும் இந்தியாவில் ஒரே நாடு, ஒரே தலைவர், ஒரே கட்சி, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே பண்பாடு என்ற ஆர்.எஸ்.எஸ் இந்துத்வா கொள்கையை அமல்படுத்துவதற்கு எதிராக நாடு முழுவதும் எதிர்ப்புகள் அதிகரித்து வருகின்றன.

கொள்ளையடித்த ஊழல் சொத்துக்களை பாதுகாக்க மோடியின் அடிமைகளாக மாறிய அதிமுக, பா.ஜ.க.வின் கூலிப்படையாக போராடும் மக்களை அடக்கி ஒடுக்கி வருகிறது. விஜயபாஸ்கர், சேகர் ரெட்டி, ராம் மோகன் ராவ், எடப்பாடி சம்பந்தி சுப்பிரமணி, கருர் அன்புநாதன், நத்தம் விசுவநாதன், டி.டி.வி, கிறிஸ்டி. எஸ்.பி.கே என நடத்தப்பட்ட ரெய்டுகள் மூலம் அதிமுகவையும் தமிழக ஆட்சி அதிகாரத்தையும் பா.ஜ.க. கைபற்றி உள்ளது. டிஜிபி மீது குட்கா வியாபாரிகளிடம் லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டு, ஆளுநருக்கும் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களுக்கும் எதிராக பாலியல் குற்றச்சாட்டுகள்...! எதற்கும் குற்ற வழக்கில்லை, யாரும் சிறை செல்லவில்லை, எல்லாக் குற்றவாளிகளும் பதவியை அலங்கரிக்கிறார்கள்.

தூத்துக்குடியில் போலீசு நடத்திய வன்முறை வெறியாட்டத்தையும், எட்டு வழிச்சாலைக்கு நிலத்தைப் பறிகொடுக்கும் விவசாயிகளின் கதறலையும் ஊடகங்கள் இருட்டடிப்பு செய்கின்றன. போராட்டச் செய்திகளை வெளியிடும் தொலைக்காட்சிகளுக்கு அரசு கேபிள் துண்டிக்கப்படுகிறது. பத்திரிகையாளர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள்.

இந்நிலையில் மோடியே திரும்பி போ என ஒட்டுமொத்த தமிழகமும் கருப்புக்கொடியுடன் முழங்கியது. தமிழகம் இந்துத்துவ பாசிசத்தின் எதிர்த்துருவம். இதுதான் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.கவை ஆத்திரம் கொள்ள வைக்கிறது. ஜல்லிக்கட்டு போராட்டத்தில் தொடங்கி, டாஸ்மாக் எதிர்ப்பு, நீட் எதிர்ப்பு, காவிரி உரிமை, ஹைட்ரோ கார்பன், மீத்தேன், பெட்ரோகெமிக்கல் மண்டலம், நியூட்ரினோ எதிர்ப்பு, ஸ்டெர்லைட் எதிர்ப்பு, எட்டு வழிச் சாலை எதிர்ப்பு என்பன போன்ற மக்களின் தன்னெழுச்சியான எதிர்ப்புகள் கார்ப்பரேட் கொள்ளைக்கு தடையை ஏற்படுத்துகிறது.

அதிகரித்துவரும் மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு அடக்குமுறைதான் ஒரே வழி என மோடி அரசு செயல்படுத்துகிறது. அதிமுக எடப்பாடி அரசு கூலிப்படையாக செய்து முடிக்கிறது. பிரதமர் இந்திராகாந்தி அவசரநிலையை திடீரென்று நாட்டின் மீது திணித்தார். இன்று கருத்துரிமை மறுப்பு, கைதுகள், ஊடகங்களின் இருட்டடிப்பு, ஆர்.எஸ்.எஸ் பாசிஸ்டுகள் நடத்தும் தாக்குதல்கள், கொலைகள் முதல் எல்லா விதமான அதிகார முறைகேடுகளும் அன்றாட நடப்புகளாக நமக்குப் பழக்கப்படுத்தப்படுகின்றன. இவற்றை எதிர்த்து விடாப்பிடியாகப் போராட முடியாமல், கைதுக்கும் சிறைக்கும் அஞ்சிக் களைத்துச் சோர்ந்து விடுவோம், பாசிசக் கொடுங்கோன்மைக்கும், அடிமைத்தனத்துக்கும் நாம் பழகிவிடுவோம் என்ற மோடி, எடப்பாடி அரசுகளின் எதிர்பார்ப்பை முறியடிக்க ஒன்றிணைவோம். ஆர்.எஸ்.எஸ் பாசிசத்திற்கும், கார்ப்பரேட் கொள்ளைக்கும் எரிரான போராட்டத்தில் தமிழகத்தை முன்னணியில் நிறுத்திக் காட்டுவோம். இது மக்கள் நலனில் அக்கறை கொண்ட எல்லா கட்சிகள் அமைப்புகள் செயல் வீரர்களின் கடமை.

மக்கள் அதிகாரம், தமிழ்நாடு
16, முல்லைநகர் வணிக வளாகம், 2வது நிழற்சாலை, அசோக்நகர், சென்னை - 83. ✆ 9962366321

# அடக்குமுறைதான் ஜனநாயகமா ?

## சாதாரண மக்கள் சட்டப்படியேகூட வாழ முடியவில்லை ! இந்த நிலை நீடிக்கலாமா?

## சிறப்பு மாநாடு

செப் – 8 மாலை 5 மணி, திருச்சி.

- ஜனநாயகத்தில் ஓட்டுப் போடுவதோடு மக்களின் பங்களிப்பு முடிவதல்ல.
- பெரும்பான்மை மக்களை பாதிக்கும் வளர்ச்சி திட்டங்களை வேண்டாம் என முடிவு செய்யும் உரிமையும், போராடும் உரிமையும் மக்களுக்கு உண்டு.
- படித்தாலும் உழைத்தாலும் சொந்த ஊரில் வாழ முடியாது என்றால் நாங்கள் எங்கே செல்வது?
- சாதாரண மக்கள் சட்டப்படியேகூட வாழமுடியவில்லை அடக்குமுறைதான் ஜனநாயகம் என்றால் பா.ஜ.க மோடி, அதிமுக எடப்பாடி அரசுகள் அதிகாரத்தில் தொடர அனுமதிக்கக் கூடாது.

**மக்கள் அதிகாரம்**

தமிழ்நாடு 9962366321

அன்பார்ந்த பெரியோர்களே,

ஆள்பவர்களும், அதிகாரிகளும் எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் மக் கள் எதுவும் செய்யக் கூடாது. அடிமாடு போல் கிடந்து சாக வேண்டும். இதுதான் ஆள்பவர்க ளின் எதிர்பார்ப்பு. விளை நிலங்களை அழித்து, விவசாயிகளை அகதிகளாக்கி, காடு, மலை, நீர் ஆதாரங்களை அழித்து சுற்றுச் சூழலை நாச மாக்கி எட்டுவழிச்சாலை எதற்கு? என பேசி னால் அவன் தேசத்துரோகி. குருவி போல் கட் டிய வீடு பறிபோகிறது; பிள்ளை குட்டிகளோடு நாங்கள் எங்கே செல்வோம்? என தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு அழும் தாய்மார்க ளின் கண்ணீரை துடைக்க யாரும் செல்லக்கூ டாது. சென்றால், அவன் வெளியூர்காரன், சமூக விரோதி, நக்சலைட். என போலீசு தடுத்து கைது செய்கிறது. இந்த அக்கிரமம் வெள்ளைக் காரன் ஆட்சியில்கூட கிடையாது.

சாலையின் முக்கிய பயன்பாடு பொருள் களை கொண்டு செல்வதுதான். சேலத்தில் புதிய தொழிற்சாலைகள் உருவாகாதபோது, எதற்காக பத்தாயிரம் கோடி செலவில் சேலம் சென்னை எட்டுவழிச்சாலை? விரைவாக சென் னைக்கு வந்து என்ன செய்யப்போகிறார்கள்?. சுங்க கட்டணம் வசூல் செய்து கொள்ளை அடிக்கவும், ஆம்னி பஸ்களும், சொகுசு கார் களும், அதிகாரிகளும், அமைச்சர்களும்தான் பயணிப்பார்கள். பன்னாட்டு கம்பெனிகள் கஞ்சமலை, கவுத்தி வேடியப்பன் மலைகளை பிளந்து இரும்பு தாதுக்களை கொள்ளையடிக் கதான் எட்டுவழிச்சாலை. சென்னை சேலம் இடையே ஏற்கனவே உள்ள மூன்று வழித்த டங்களை அகலப்படுத்தி போக்குவரத்து நெரி சலை சரி செய்ய என்ன முயற்சி எடுத்தார்கள் என்ற மக்களின் நியாயமான கேள்விகளுக்கு அதிகாரிகள் அமைச்சர்கள் பதில் சொல்ல முடி யவில்லை.

நிலம், நீர், காற்று நஞ்சாகி எதிர்கால தலைமுறைகளை பாதிக்கும் ஸ்டெர்லைட் ஆலையை மூடு என நடந்த நூறாவது நாள் முற்றுகைப் போராட்டத்தில் எடப்பாடி அர சாங்கம் துப்பாக்கிச்சூடு நடத்தி 13 பேரை படு கொலை செய்தது. கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிராக யார் போராடினாலும் இதுதான் கதி என தூத்துக்குடிமாடல் படுகொலையை, அடக்கு முறையை தமிழகம் முழுவதும் அமுல்படுத்த முயலுகிறது தமிழக போலீசு. இதை பற்றி பேசி னால் தேசத்துரோக வழக்கு. பேசுவதற்கு இடம் கொடுத்த அரங்கத்தின் மீது வழக்கு. எதிர்கட்சி கள் 'தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு' என சட்டமன் றத்தில் பேச அனுமதி கிடையாது. அரசுக்கு எதி ராக முகநூலில் பதிவிட்டால், முழக்கமிட்டால், பிரசுரம் கொடுத்தால், போஸ்டர் ஒட்டினால், கார்ட்டூன் வரைந்தால், கருப்பு கொடி காட்டி னால் கைது, சிறை. பொதுக்கூட்டம் இரண்டு மணி நேரத்தில் முடிக்க வேண்டும். இரண்டு பேர்தான் பேச வேண்டும். அதிக மக்கள் வரக் கூடாது. மாற்று கட்சி நபர்கள் பேசக்கூடாது என எப்போதும் இல்லாத வகையில் ஜனநா யகத்தின் கை கால்கள் வெட்டப்படுகின்றன. இம் என்றால் சிறை ஏன் என்றால் என்.எஸ்.ஏ. குண்டாஸ். இந்த நிலை நீடிக்கலாமா?. இந்திய ஜனநாயகத்திற்கு பேராபத்து, என பணியில் இருக்கும் உச்சநீதிமன்ற மூத்த நீதிபதிகள் பத் திரிக்கையாளர்களை சந்தித்து நாட்டு மக்களை எச்சரிக்கிறார்கள்.

விவசாயம், பொருளாதாரம், வேலை வாய்ப்பு, விலைவாசி, வளர்ச்சித் திட்டம், ஊழல் ஒழிப்பு, கருப்பு பண மீட்பு, ஸ்கில் இந்தியா, மேக் இன் இந்தியா, சுவிட்ச் பாரத் என அனைத்திலும் மோடி அரசு படுதோல் வியை அடைந்துள்ளது. தோற்றுப்போன பிரத மரை தூக்கி நிறுத்த அரசின் விளம்பர செலவு ரூபாய். 4343 கோடி. ஸ்விஸ் வங்கியிலிருந்து கருப்பு பணத்தை மீட்கவில்லை. ஆண்டுக்கு இரண்டு கோடி வேலைவாய்ப்புகள் உருவாக் கவில்லை. படித்த இளைஞர்களை பக்கோடா விற்க சொல்கிறார். 500, 1000 ரூபாய் நோட்டு செல்லாது என்ற அறிவிப்பால் கருப்பு பணம், கள்ள நோட்டு ஒழியவில்லை. ஜி.எஸ்.டியால் விலைவாசி குறையவில்லை. பல ஆயிரம் சிறு தொழில்கள்தான் அழிந்தன. பல லட்சம் பேர் வேலையிழந்தார்கள். ஸ்விஸ் வங்கியில் ஒன்றரை மடங்கு கருப்பு பணம் அதிகரித் துள்ளது. ஜி.எஸ்.டி. வரம்பிற்குள் பெட்ரோல், டீசல், மின்சாரம், சாராயம் கொண்டுவர முடி யவில்லை. உலகம் முழுவதும் பெட்ரோல் விலை குறையும் நிலையில் இந்தியாவில் தின மும் ஏறிக்கொண்டே இருக்கிறது. வாங்கும் சக் தியே இல்லாத இந்தியாவில் மேக் இன் இந்தியா என்ற முழக்கம் அர்த்தமற்றதாகிவிட்டது. கல் யாணமே ஆகாத ஒருத்தனுக்கு பிறக்க போகும் குழந்தைக்கு கல்வி கடன் கொடுத்தது போல் கட்டிடமே இல்லாத அம்பானி பல்கலைக்கழ கத்திற்கு ஆயிரம் கோடி ரூபாயை மோடி அரசு அள்ளி கொடுப்பதுதான் கல்விக் கொள்கை.

விவசாயிகள் வருமானத்தை இரட்டிப் பாக்குவேன் என்ற மோடி ஆட்சியில்தான் கார்ப் பரேட் முதலாளிகளுக்கு ஆதரவாக விளைநி லங்கள் பறிப்பு, விவசாயிகள் தற்கொலைகள், எண்ணற்ற போராட்டங்கள் நடக்கின்றன. நான்கு ஆண்டுகள் எதுவும் செய்யாமல் தற் போது விவசாய விளைபொருளுக்கு ஒன்றரை மடங்கு ஆதார விலை உயர்வு என்ற அறிவிப் பால் பயனில்லை. அரசு கொள்முதல் செய்யா மல் விலை உயர்த்தி என்ன பயன்?. குஜராத்தி, பனியா, பார்சி, சிந்தி, மார்வாடி வகுப்புகளைச் சேர்ந்த அதானி, அம்பானி, அகர்வால், நீரவ் மோடி, லலித் மோடி, டாடா, பிர்லா போன்ற ஒரு குறிப்பிட்ட பிரிவு முதலாளிகளின் நலனுக் காகத்தான் மோடி அரசு சேவகனாக செயல்படு கிறது. அவர்களின் வளர்ச்சிதான் இந்தியாவின் வளர்ச்சி என முன்னிறுத்துகிறது. அவர்கள்தான் இந்தியாவை ஆள்கிறார்கள். அவர்களின் எடுபி டிகள்தான் ஆர்.எஸ்.எஸ்ம், பிஜேபியும். இந்த முதலாளிகளுக்கு அரசு கொடுத்த பத்து லட்சம் கோடி வங்கிக் கடன் இன்று வாராக்கடனாகி நிற்கிறது. பொதுத்துறை வங்கிகள் திவாலாகும் அபாய நிலையில் எல்.ஐ.சி. பணத்தை அவற் றில் முதலீடு செய்து எல்.ஐ.சியையும் ஒழிக்க முயல்கிறது மோடி அரசு.

பா.ஜ.க. மோடி அரசு தனது தோல்வி களை மறைத்து, மக்களை திசைதிருப்பி தலித் துக்கள், இஸ்லாமியர்களுக்கு எதிராக சாதி மத கலவரங்களை ஏற்படுத்தி அதன் மூலம் வாக்கு வங்கியை அடைய விரும்புகிறது. மேலும் அதி காரத்தை இழந்து விடுவோமோ என்ற அச்சத் தில் பதற்றத்தில் தான்தோன்றித்தனமாக அடக் குமுறைகளை ஏவுகிறது நீதித்துறை உட்பட அனைத்திலும் ஆர்.எஸ்.எஸ். சார்புடையவர் களை நியமித்து அரசு கட்டமைப்பையே இந் துத்துவ பாசிசமயமாக்கி வருகிறது. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் பசு பாதுகாவலர்கள் என்ற இந்துத்துவா வெறியூட்டப்பட்ட குண் டர்படை தலித்துக்கள், இஸ்லாமியர்கள் மீது தாக்குதல் நடத்தி கொல்கிறது. பிணையில் வந்த கொலையாளிகளுக்கு பா.ஜ.க. அமைச் சர் மாலை போட்டு வரவேற்கிறார்.

உ.பி. பா.ஜ.க. எம்.எல்.ஏவும் அவன் சகோதரனும் மனு கொடுக்க வந்த மாணவியை பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் முதல் வர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீதிமன்ற உத்திரவில்தான் சி.பி.ஐ அவர்களை கைது செய்தது. ஜம்முவில் ஆசிஃபா என்ற எட்டு வயது சிறுமியை போலீசார், பூசாரி உட் பட பலர் வல்லுறவு செய்து கொலை செய்த கொடூரம் நமது ரத்தத்தை உறைய செய்தது. ஆனால் பா.ஜ.க. அமைச்சர் தலைமையில் குற்றவாளிகளை கைது செய்யக்கூடாது என சங்பரிவார் ஜம்முவில் ஊர்வலம் நடத்தியது. மராட்டியத்தில் ஆண்டுதோறும் நடத்தப்படும் பீமா கோரேகான் விழாவில் இந்தாண்டு தலித் துக்கள் மீது சங்பரிவார் கும்பல் திட்டமிட்டு கலவரத்தை நடத்தி உள்ளது.